செய்தி வெளியீடு எண் : 1164 நாள் : 13.06.2023

<u>செய்தி வெளியீடு</u>

## மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்க துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்பு போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா ஒருங்கிணைந்த பயிற்சி வகுப்பு மற்றும் பாடத்திட்டத்தினை தொடங்கி வைத்து மாணவ மாணவியர்களுக்கு பயிற்சி கையேட்டினை வழங்கினார்.

சென்னை கோட்டடூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இன்று (13.06.2023) மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்க துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்பு போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா ஒருங்கிணைந்த பயிற்சி வகுப்பு மற்றும் பாடத்திட்டத்தினை தொடங்கி வைத்து மாணவ மாணவியர்களுக்கு பயிற்சி கையேட்டினை வழங்கினார்.

இந்த விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்க துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும் போது கூறியவதாது:–

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டி தேர்வுப் பிரிவானது 07.03.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் இரயில்வே/ எஸ்.எஸ்.சி/ வங்கித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா ஒருங்கிணைந்த பயிற்சி வகுப்புகளை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 100 நாட்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டது.

மாவட்டந்தோறும் 150 மாணவர்களுக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், வழிகாட்டுதல் மற்றும் பாடப் புத்தகங்கள் கொடுக்கத் திட்டமிடப்பட்டு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது. பயிற்சி வகுப்புகளுக்காக, நான் முதல்வன் இணையதளத்தில் மொத்தம் 26,000 விண்ணப்பதாரர்கள் விருப்பம் தெரிவித்திருந்தார்கள் , அதில் 6900 மாணவர்கள் அவர்களது பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மற்றும்

இளநிலை பட்டப்படிப்பின் மதிப்பெண்கள் அடிப்படையிலும் தமிழ்நாட்டு அரசின் கல்விக்கான இட ஒதுக்கீட்டின் வாயிலாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் .

இதற்கான பயிற்சி வகுப்புகள் மற்ற மாவட்டங்களில் 29.05.2023 அன்று முதல் செயல்பாட்டிற்கு வந்த நிலையில், சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பயிற்சி வகுப்பு இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது – எனக் கூறினார்.

மேலும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் இரயில்வே/ எஸ்.எஸ்.சி/ வங்கித் தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தை தொடங்கிவைத்து மாணவ மாணவியர்களுக்கு பயிற்சி கையேட்டினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த விழாவில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர், திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப , வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் திரு. கோ. வீர ராகவ ராவ் இ.ஆ.ப மற்றும் நான் முதல்வன் போட்டி தேர்வுப் பிரிவின் சிறப்புத்திட்ட இயக்குநர் திரு. சி. சுதாகரன் மற்றும் முதன்மை நிர்வாக அலுவலர் திரு. ஜெயப்பிரகாசம்ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in